**OS No.61/2019**
DW 2 – ராமுஅண்ணாமலைசாமி

நாள் 27.02.2026

**பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் சென்னையில் 20 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் மதுரையில் பிறந்தேன். ஆனால் சிறுவயதில் இருந்தே சென்னையில் தான் இருந்து வருகிறேன். நான் IT Software தொழில் செய்து வருகிறேன்.

கிராமத்தில் உள்ள சொத்தின் சர்வே எண் 87/2 ஆகும். அந்த சொத்தானது வழக்கில் 4 வது இலக்கமாக உள்ளது. சர்வே எண் 87/2 ஐ கிரயம் வாங்குவதற்கு முன்னர் மாணிக்கம் என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினேன். மேற்படி மாணிக்கம் பாண்டி என்பவர் அதிகார முகவர் ஆவார்.

கிரயம் வாங்குவதற்கு முன்பு ஸ்தல விசாரணை மேற்கொண்டு கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று வாங்கினேன். கிராம நிர்வாக அலுவலர் அளித்த அந்த சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

நான் கிரயம் வாங்கும் போது அந்த சொத்து பாண்டியின் தாயார் பொன்னம்மாள் பெயரில் பட்டா இருந்ததாகச் பாண்டி மற்றும் மாணிக்கம் என்னிடம் சொன்னார்கள். மேற்படி பட்டாவை எனது பெயருக்கு மாற்றி கொடுப்பதாகச் சொன்னார்கள். பட்டாவை பொறுத்து நான் வருவாய்துறை ஆவணங்களை நான் பார்வையிடவில்லை.

அந்த பட்டாவைப் பற்றிய விபரங்கள் என் கிரயப்பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ 1 ன் அசல் ஆவணம் எங்கிருக்கிறது என்று கேட்டால் ஏதாவது அடமானம் வைத்திருப்போம் எங்கு அடமானம் வைத்திருப்போம் என்று தெரியவில்லை.

எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் போது அசல் ஆவணம் உங்களிடம் இருந்ததா என்று கேட்டால் ஞாபகமில்லை. அந்த அசல் ஆவணம் உங்கள் கைவசம் தான் உள்ளது வேண்டும் என்றே வழக்கிற்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நீங்கள் சொல்வது போல் எந்த தனியாரிடம் எப்போது வைத்திருப்பேன் என்று சொல்லியிருப்பீர்கள் அவ்வாறு சொல்லவில்லை என்பதால் அசல் ஆவணம் உங்கள் கைவசம் தான் உள்ளது என்றால் சரியல்ல.

எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை யார் சொன்னது என்று கேட்டால் நான் தான் சொன்னேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் பத்தி 4 ல் சொல்லப்பட்டுள்ள விபரங்களை யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் தாவா கிராமத்தில் விசாரித்து தெரிந்து கொண்டேன். யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது.

இந்த வழக்கில் எனக்கு கிரயம் கொடுத்த பவர் ஏஜென்ட் 29 வது பிரதிவாதி மாணிக்கம் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள விபரம் எனக்குத் தெரியாது. சர்வே எண் 87/2 க்கு செட்டில்மெண்ட் காலத்தில் பொன்னம்மாள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை நான் பார்த்ததில்லை, பொன்னம்மாளுக்கு அவர் அப்பா சீதனமாக கொடுத்த சொத்து என்று சொன்னார்கள்.

மேற்படி பொன்னம்மாளுக்கு எத்தனை மக்கள் என்பதை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. பொன்னம்மாளை பாண்டி தான் பார்த்துக்கொண்டிருந்தார் என்று சொன்னார்கள் தாவா சொத்து அவருடைய அனுபவத்தில் இருந்ததாக சொன்னார்கள். தாவா சொத்தை பாண்டி அனுபவம் செய்து வந்ததாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா மேலும் வருவாய் துறை ஆவணங்களை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

நீங்கள் கிரயம் பெற்ற ஆவணத்தில் பாண்டி அனுபவம் செய்து வந்ததாகக் சொல்லக்கூடிய ஆவணங்கள் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் சொல்லப்பட்டுள்ளது போல பொன்னம்மாள் பாண்டிக்கு தாவா 4 வது இலக்க சொத்தை விட்டுக்கொடுக்கவும் இல்லை, விட்டுக்கொடுத்தாக தவறாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

தாவா சொத்து சம்பந்தமாக பாண்டி மாணிக்கத்திற்கு பவர் 11.01.2007, ஆவண எண் 10/2007 ஆகும். கிரயம் செய்யப்பட்ட காலத்தில் பவர் பத்திரம் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் ஞாபகமில்லை.

நீங்கள் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பாண்டி மாணிக்கத்திற்கு 19.12.2006 ம் தேதியில் ஆவண எண் 364/2006 என்ற எண்ணில் பவர் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியாக இருக்கும் வேறு ஒரு சர்வே நம்பருக்கு உரியதாக இருக்கலாம். புல எண் 87/2 சொத்து சம்பந்தப்பட்ட மேலே சொல்லப்பட்டுள்ள பவர் பத்திரம் கிடையாது.

தாவா சொத்து சம்பந்தப்பட்ட செட்டில்மெண்ட் காலத்து ஆவணங்களையோ, யூ.டி.ஆர் ஆவணங்களையோ நான் நேரடியாகப் பார்க்கவில்லை விசாரிக்கும் போது சொன்னதன் அடிப்படையில் நான் சொல்கிறேன். பி.வா.சா. ஆ 1 ஆவணத்தில் எந்த வித வருவாய் துறை ஆவணங்களும் குறிப்பிட்டு காட்டப்படவில்லை.

இன்றைய தேதியில் இந்த சொத்திற்கு கணினி பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் நிறைய பேர் பெயரில் பட்டா உள்ளது, அதற்கு புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகார் கொடுத்ததாக நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை இந்த வழக்கிற்கு பின்பு தான் நாங்கள் விசாரித்து புகார் கொடுத்தோம்.

மேற்படி புகார் மனுவை தாக்கல் செய்யவும் இல்லை, நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால்

சொல்லவில்லை. பாண்டியுடன் பிறந்தவர்கள் யார் யார் என்பது தெரியாது. அவருடைய தாயார் பொன்னம்மாளை நான் நேரடியாக பார்த்ததில்லை. பாண்டியுடன் பிறந்தவர்கள் யார் என்பது தெரியாததால் வாதி தாக்கல் செய்துள்ள வம்சாவழிப்பட்டியல் தவறு என்று சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

பாண்டியுடன் பிறந்தவர்கள் குழந்தைவேல், சண்முகம், கந்தசாமி, ராமையா மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் ஆவார்கள் அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. வாதி சீனிவாசன் பாண்டியுடன் பிறந்த கந்தசாமியின் மகன் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

தாவா 4 ம் இலக்க சொத்து பொன்னம்மாளுக்குப் பாத்தியப்பட்டது என்றும் அவரின் மறைவிற்கு பின்பு அவரின் அனைத்து வாரிசுகளுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் பொன்னம்மாள் பெயரில் பட்டாவும் அவருக்கு பின்பு அவரின் வாரிசுகள் பெயரில் பட்டாவும் உள்ளது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தாவா சொத்து பொதுக்குடும்ப சொத்து என்றால் சரியல்ல.

நீங்கள் சொல்வது போல் பாண்டிக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டதும் அல்ல அவரின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல. வாங்கிய நாள் முதல் இன்று வரை சட்டப்படியான அனுபவம் என் வசம் தான் உள்ளது. அதில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறோம்.

நான் கிரயம் பெற்ற கிரையப்பத்திரத்தில் பாண்டியின் உடன் பிறந்த சகோதரர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. நீங்கள் கிரயம் வாங்கிய சொத்து சம்பந்தமாக வாதி காவல் துறையில் புகார் கொடுத்தாரா என்றால் ஞாபகமில்லை.

பி.வா.சா.ஆ 1 ஆவணம் சம்பந்தமாக வாதி உங்கள் மீதும் பாண்டி மீதும் சிவகங்கை காவல்துறை கண்காணிப்பாளரிடம் 07.05.2018 ல் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ 1

ஆவணம் 2007 ல் கிரயம் பெறும் போது வாதிக்குத் தெரியாது வாதிக்கு தெரிந்த பின்பு தான் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

பாண்டியின் வாரிசுதாரர்கள் இந்த வழக்கில் கட்சிகாரர்களாக உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தை கிரயம் வாங்கிய காலத்தில் இருந்து அனுபவம் செய்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரயம் பெற்றது முதல் அனுபவம் செய்து வருவதற்கு அனுபவத்தைக் காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நீங்கள் சொன்ன கிரயமும், அனுபவமும் இந்த வாதியை கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த சொத்தில் தனிப்பட்ட உரிமை பாண்டிக்கு இல்லாத பட்சத்தில் நீங்கள் கிரயம் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. இந்த பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் தனிப்பட்ட பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.